இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 17.02.2026

# ரங்கசாமி சிரிக்கிறார்!

**கா**ரைக்காலில் உரையாற்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, வாய்க்கு வந்ததை அள்ளிவிட்டுள்ளார். ‘புதுச்சேரியில் இரட்டை எஞ்சின் ஆட்சியால் வளர்ச்சி அதிகமாகி உள்ளது’ என்று அமித்ஷா சொன்னது முக்கியமான அல்வா ஆகும். இதைக் கேட்டதும் புதுச்சேரி மக்களை விட அம்மாநிலத்தின் முதலமைச்சர் ரங்கசாமி தான் அதிகம் சிரிக்கிறார். ‘அப்படியா? அந்த எஞ்சின் எந்த ஷெட்டில் நிற்கிறது? எந்தப் பாதையில் ஓடுகிறது?’ என்று அவர் கேட்டிருப்பார்.

“பிரதமர் நரேந்திரமோடி, புதுச்சேரி மாநில முதலமைச்சர் ரங்கசாமி ஆகிய இரட்டை எஞ்சின் செயல்பாடுகள் பற்றிச் சொல்லவே நான் வந்திருக்கிறேன்” என்ற பீடிகை போட்டு பொய் மூட்டைகளை அவிழ்த்திருக்கிறார் அமைச்சர் அமித்ஷா.

**ஒன்றிய அரசு புதுச்சேரிக்கான கடனை தள்ளுபடி செய்யாததால் மாநில வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது.**

**புதுச்சேரியில் முதலமைச்சராக ரங்கசாமி இருந்தாலும், அவரை நிம்மதியாக ஆள விட்டதா பா.ஜ.க.? துணை நிலை ஆளுநர்கள் மூலமாக அவருக்குக் குடைச்சல் கொடுத்துக் கொண்டு தான் இருந்தார்கள். இருக்கிறார்கள். ஏற்கனவே மூன்று முறை முதலமைச்சராக இருந்தவர் ரங்கசாமி. அப்போதெல்லாம் நிம்மதியாக ஆண்ட அவர், பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்த பிறகு அவரது நிம்மதி போனது.**

ஒன்றிய சுற்றுலாத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டிக்கு முன்பே, “ நம்மால் முடிந்ததை நாம் செய்ய வேண்டும். விரைவாகச் செய்ய வேண்டும். ஆனால் நாம் எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் கேட்க வேண்டும். மத்திய உள்துறை அமைச்சரிடம் கேட்க வேண்டும். நாம் நினைத்தபடி புதுச்சேரி சுற்றுலாவை மேம்படுத்த முடியவில்லை. தொழில் செய்ய அனுமதி விரைவாகக் கிடைக்கவில்லை என்பதால் புதுச்சேரி வருவதற்கே அச்சப்படுகின்றனர். புதுச்சேரியை சிங்கப்பூர் ஆக்க நினைத்தேன். இதுவரை அதற்காக எதுவும் செய்ய முடிந்ததா? இல்லை. நிர்வாகச் சிக்கலே இதற்குக் காரணம்” என்று வருத்தப்பட்டார் ரங்கசாமி. இப்படித்தான் வைத்திருந்தார்கள் ரங்கசாமியை.

**புதுச்சேரி மக்களின் முக்கியமான கோரிக்கையே மாநிலத் தகுதி பெறுவது தான். அதற்கு துளிகூட முயற்சி எடுத்ததா ஒன்றிய மோடி அரசு? இல்லை. தன்னை வந்து சந்தித்தவர்களிடம், “எனக்கு நாள்தோறும் மன உளைச்சல் தான் ஏற்படுகிறது. புதுச்சேரிக்கு உண்மையான விடுதலை கிடைக்கவில்லை” என்று ரங்கசாமி புலம்பியதாகச் செய்திகள் வந்ததே! அதனை அறிவாரா அமைச்சர் அமித்ஷா?**

ஆளுநர், அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லை என்பதை பலமுறை புலம்பினாரே ரங்கசாமி. சுகாதாரத் துறை இயக்குநர் நியமனத்தில் தான் நினைத்ததை செய்ய முடியவில்லை என்பதால் மூன்று நாட்கள் சட்டசபைக்கே செல்லாமல் இருந்தார் ரங்கசாமி. புதுவை மக்களைப் போலவே தொல்லைக்கு மேல் தொல்லை அனுபவித்தவர் அந்த மாநில முதலமைச்சர் ரங்கசாமி. இதைத்தான் சூப்பரான ஆட்சி என்கிறார் அமித்ஷா.

**மூடப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஆலைகள் பிரச்சினை தீர்க்கப்பட்டதா?பாப்ஸ்கோ (PAPSCO) மற்றும் பாசிக் (PASIC) ஆகிய நிறுவனங்களை மீண்டும் சீரமைத்து, ஊழியர்களுக்கு நிலுவையில் உள்ள ஊதியத்தை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், இன்னும் பல ஊழியர்களுக்குச் சம்பளப் பாக்கி தீர்க்கப்படாமல் உள்ளது.**

**ஏ.எப்.டி (AFT) பஞ்சாலைகளைத் திறந்து வேலைவாய்ப்பை உருவாக்குவோம் என்ற வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.**

**புதுச்சேரி மக்களின் நீண்ட கால கோரிக்கையான இலவச அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் நியாய விலைக்கடைகளை (Ration Shops) மீண்டும் திறப்பதாக அறிவிக்கப்பட்டது. பலமுறை இதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டாலும், இன்னும் முழுமையாக அனைத்துக் கடைகளும் செயல்படத் தொடங்கவில்லை.**


**அரசுத் துறைகளில் உள்ள சுமார் 10,000-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்புவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. சில துறைகளில் தேர்வுகள் நடந்தாலும், பெரும்பாலான இடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இளைஞர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.**

**கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை மீண்டும் இயக்குவதில் தேக்கம் நிலவுகிறது. நீண்ட காலமாக நடத்தப்படாமல் உள்ள உள்ளாட்சித் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள் இதுவரை நடத்தவில்லை. மின்துறை தனியார் மயமாக்கப்படுவதைத் தடுப்போம் என்று கூறிவிட்டு, தற்போது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது ஊழியர்கள் மற்றும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.**

புதுச்சேரியில் சமீபத்தில் மருந்து கொள்முதல் மற்றும் விநியோகத்தில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் பெரும் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியது. மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட சில மருந்துகள், அவற்றின் காலாவதி தேதி (Expiry Date) முடிந்த பிறகும் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டதாகப் புகார்கள் எழுந்தன. மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியம் (CDSCO) நடத்திய சோதனையில், புதுச்சேரி அரசு கொள்முதல் செய்த சில மருந்துகள் “தரமற்றவை” (Not of Standard Quality) என வகைப்படுத்தப்பட்டன. அரசு மருத்துவமனைகளில் உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் அடிப்படை மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளிகள் தரப்பில் தொடர் புகார்கள் வந்தன. மருந்துகள் இருந்தும் அவை முறையாக விநியோகிக்கப் படவில்லை அல்லது கணக்கில் காட்டப்படவில்லை என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கேள்விகள் கேட்டபோதும் முறையான பதில் இல்லை.

**பணிநீக்கம் செய்யப்பட்ட தற்காலிக ஊழியர்களை காவல் துறையை ஏவி அடித்துக் கொலை வெறித்தாக்குதல் நடத்தி, அவர்கள் மீதே வழக்குப் போட்டது தான் என்.ஆர். பா.ஜ.க. இரட்டை எஞ்சின் செயல்பாடு ஆகும். 9 வயது சிறுமி கடத்தப்பட்டு, பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு சில நாட்கள் கழித்து சடலமாக மீட்கப்பட்ட அவலத்தையும் மக்கள் மறக்கவில்லை.**

**இரட்டை எஞ்சின் என்பது புதுச்சேரியிலும் டப்பா எஞ்சின் தான்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (16.02.2026) தலைமைச் செயலகத்தில், மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திட உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர் குரியன் ஜோசப் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு தனது அறிக்கையினை சமர்ப்பித்தது. உடன் குழுவின் உறுப்பினர்கள் இந்திய கடல்சார் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தர் அசோக் வர்தன் ஷெட்டி, தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் மேனாள் துணைத் தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

## மகளிருக்கு ரூ.5000! வரும் சட்டமன்றத் தேர்தலுக்கான

# முதல்வரின் Game Changer Moment !

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் எழுதிய கடிதத்தில் ஆணித்தரம்!

**அன்பு கெழுமிய நண்பர், தலைவர், திராவிட மாடல் அரசின் மானமிகு, பாசமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்களே,**

அன்பான வணக்கம்,

முதற்கண் வாழ்த்துகள்!! “மகளிர் உரிமை தொகையை” பயனாளர்கள் எதிர்பாராத நேரத்தில் அளித்தமைக்கு பாராட்டுகள்.

இன்ப அதிர்ச்சியில் மகளிர் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அனைத்து மகளிர்களுக்கும் தடங்கலின்றி கிடைத்திட உறுதியுடன் சமயோசிதமாக திட்டத்தினை செயல்படுத்தியதற்காக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தினை தடுத்திட சங்கிகள் திட்டமிட்டுள்ளதை அறிந்து மிக மிக இரகசியமாய் அரசு இயந்திரத்தை செயல்பட வைத்து அதிகாலையில் அவரவர் வங்கி கணக்கில் ரூபாய் 5000-த்தை 1.31 கோடி மகளிர் கணக்கில் வரவு வைத்தது 2026 சட்டமன்றத் தேர்தலின் Game Changer Moment ஆன செயல். இச்செயல் மூலம் ஐம்பது வருட பொதுவாழ்வுக்கு சொந்தக்காரர் தாங்கள் என்பதை நிரூபித்து விட்டீர்கள். Stalin is more dangerous than Kalignar என்று கூறியவர் சொன்ன கூற்றை மெய்ப்பித்து காட்டியுள்ளீர்கள்.**

உங்களை தலைவராக வார்த்தெடுத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உங்களை தலைவராக அடையாளங் கண்டு கொண்டு, தலைவராக ஏற்றுக் கொண்ட இனமானப் பேராசிரியரும் இச்செய்கைக்காக தங்களை உச்சி மோந்திருப்பார்கள்.

உங்களது இடைநில்லாத உழைப்பும், அரசியல் ஆற்றலும், சமயோசிதமாக செயல்படும் திறனும் கண்டு எதிர்க்கட்சிகள் அதிர்ந்து வாயடைத்து நிற்கின்றனர்.

உங்களை தலைவராகப் பெற்றதில் திராவிட இயக்கம் பெருமை கொள்கிறது. கலைஞர் மகளிர் உரிமை திட்டத்திற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மூன்று மாதத்திற்குரிய பணத்தை முன்பணமாக தந்துள்ளீர்கள். கோடைக் காலத் தொகையான இரண்டாயிரம் தான் திட்டமிடப் படாத செலவு அதுவும் சுமார் 2620 கோடி ரூபாய் தான் அதிகப் படியான செலவு. (ஆதாரம் தினத்தந்தி தலையங்கம்) அரசின் பட்ஜெட்டில் இச்செலவு வெறும் 0.75 விழுக்காடு தான். மேலும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை ரூபாய் இரண்டு ஆயிரமாக உயர்த்த உறுதியளித்தது Master Stroke.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல் என்பது சாதாரண தேர்தல் அல்ல இந்துத்துவ சித்தாந்தத்தை முன்னிறுத்தும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், திராவிட சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின்



தலைமையிலான கூட்டணிக்கும் இடையேயான போட்டியாகும்.

இத்தேர்தலில் அமோக வெற்றியை பெற தாங்களும், தம்பி உதயநிதியும் நல்கும் உழைப்பு கண்டு அனைவரும் வியந்து போற்றுகின்றனர். இனி தமிழகத்தில் எந்நாளும் தி.மு.க. ஆட்சிதான் என்பதை மனதில் வைத்து கடுமையான உழைப்பை கழகத்தவர் வழங்க வேண்டிய தேர்தல் இது!

தமிழகத்தின் வெவ்வேறு பகுதியில் நடைபெறும் மாநாடு போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்க மகளிர், கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் உறுப்பினர்களை அழைத்து அவர்களின் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்துவது மிகுந்த பலனை அளிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். அவர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த உதவும்.

**சமீபத்தில் தாங்கள் கூறிய பின்வரும் கருத்து முற்றிலும் உண்மையானது “வருமானம் குறைவு - செலவு அதிகம், இதுதான் தமிழ்நாடு அரசாங்கத்தின் நிதி நிலைமை. பேரறிஞர் அண்ணாதான் சொன்னார் பெட்டி இருக்கிறது! பூட்டு இருக்கிறது! சாவி இருக்கிறது! ஆனால் பெட்டி காலியாக இருக்கிறது என்று சொன்னார். திட்டமிட்டு செயற்கையாக இந்த நிதி நெருக்கடியை உருவாக்குகிறார்கள்! அரசியல் ரீதியாக மட்டுமல்ல, நிர்வாக ரீதியாகவும் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியை வெற்றிகரமாக சமாளித்துதான், ஆட்சி அதிகார சக்கரத்தை நகர்த்தி மக்களின் எதிர்பார்ப்புகளை சமாளிக்கிறோம்” என்று சமீபத்தில் தாங்கள் எடுத்துரைத்தது மிகவும் உண்மை, அதனை துணிச்சலுடன், சமரசத்திற்கு ஆட்படாமல், கழக ஆட்சியை டெல்லி தர்பாருக்கு Out of Control என்று வெளிப்படையாக உறுதிபட தெரிவிக்கும் கொள்கை உறுதியை கண்டு நாடே வியக்கிறது.**

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழகம் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருகிறது “பொருளாதாரத்தில் முன்வரிசை; இரயில்வே திட்டங்களில் 12 வது இடம் என்று 09.02.26 தினத்தந்தி தலையங்கத்தில் தனது ஆதங்கத்தை பதிவு செய்துள்ளது. பொருளாதார ரீதியாக இந்தியாவிலேயே மராட்டிய மாநிலத்திற்கு அடுத்தாற்போல் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது, இதர வளர்ச்சி குறியீடுகளிலும் தமிழ்நாடு முன்வரிசையில் உள்ளது. இரயில்வே துறையின் திட்ட ஒதுக்கீட்டில் மராட்டியத்திற்கு 23,926 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, ஆனால் தமிழ்நாட்டிற்கு ரூபாய 7,611 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலிடத்திற்கும், இரண்டாவது இடத்தில் உள்ள தமிழகத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் தெள்ளத் தெளிவாக தெரிகிறது, ஏன் அண்டை மாநிலமான ஆந்திராவிற்கு ரூபாய் 10,134 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள திட்டங்களின் தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்காமல், திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளது, இதனை காணும் பொழுது யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டது போல என்ற பழமொழி தான் நினைவுக்கு வருகிறது என்று ‘தினத்தந்தி’ தலையங்கம் தீட்டியுள்ளது.

குடியரசு நாளையொட்டி நாளேடுகளில் முதல் பக்கத்தில் உள்ள தமிழ்நாடு அரசின் விளம்பரம், இந்தியர்களின் மனநிலையை பிரதிபலிக்கும் விதமாக அமைந்துள்ளது.

**Unified India என்றால்**
**ஒன்றுபட்ட இந்தியா.**
**Uniform India என்றால்**
**ஒரே மாதிரியான இந்தியா.**

இந்திய மக்கள் ஒரே மாதிரியாக இல்லை. இந்தியாவில் பரவலாக பேசப்படும் மொழியே 500-க்கும் மேல். அரசு அட்டவணை மொழிகளே 22.

பலவகையான மக்கள் வாழ்வியல் முறை. மதங்கள் பல. உணவு பலவகையானவை. திருமணங்கள் பல வகையானவை. ஆனால் இந்தியா என்ற நாடு வேற்றுமைகள் இருந்தும் ஒற்றுமையாக இருக்கிறது. அது தான் நமக்கான நாடு.

ஒரே மொழியாய்,
ஒரே மதமாய்,
ஒரே பண்பாடாய்,
ஒரே தேர்தலாய்,
ஒரே அதிபராய், ஒரே கல்வியாய்,
ஒரே உணவாய் அல்ல !

வேற்றுமையில் ஒற்றுமை காண ஒன்றிணைவோம் என்ற சித்தாந்தத்தின் எதிரி பா.ஜ.க. அதனால் தான் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாடு vs NDA என்று சட்டமன்றத் தேர்தலின் கருப்பொருளை விளக்கியிருந்தீர்கள்.

திராவிட மாடல் அரசு,

ஜனநாயகம் போற்றும் அரசு

இந்திய அரசமைப்புச் சட்டத்தை காக்கும் அரசு

உயர்கல்வியின் பொற்கால அரசு

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கச் செய்ய உறுதி பூண்டுள்ள சமத்துவ அரசு.

சமூக நீதிக்கான அரசு

மகளிர் வளர்ச்சிக்கு முன்னுரிமை தரும் அரசு

பண்பாட்டு படையெடுப்பைத் தகர்க்கும் அரசு

‘திராவிட மாடல்’ என்றால் எத்தகையது என்பதை செயலில் காட்டும் அரசு. ஏழாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரும். தாங்கள் இரண்டாவது முறையாக முதல்வராக்க கடமையாற்றுவோம். கழகத்தின் வெற்றி நம் அனைவரின் வெற்றி என்று உணர்ந்து தேர்தல் களத்தில் செயல்படுவோம்.

**ஒருவனின் எண்ணம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அவன் உயர்வடைகிறான் என்று வள்ளுவர் கூறுகிறார்.**

**வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு.**
**(குறள் - 595)**

**உயர்ந்த எண்ணம், “சரியான முடிவு”, இலட்சியம் ஆகிய அனைத்தும் கொண்ட தலைவர்கள் உயர்ந்த எண்ணம் உடையவர்களாக இருக்க வேண்டும். உயர்ந்த எண்ணத்தைச் செயல்படுத்தினால்தான் வெற்றி அடைய முடியும். அத்தகைய தலைமை பண்புகளை கொண்டவர் தாங்கள்.**

இத்தகைய நிலையில் உங்களின் தலைமையின் கீழ் ஒன்றிணைவோம்!! வெல்வோம் ஒன்றாக!!! வெல்வோம் இருநூறு!!! படைப்போம் வரலாறு!!!

வாழ்க உங்கள் கொற்றம்!!!
வெல்க திமுக!!!

**பாசத்துடனும், பிரியத்துடனும்,**

**அ. அன்புச்செல்வன்**
16.02.2026